பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 15 திங்கட்கிழமை (27-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 151

# போர் நிறுத்தம் ஏற்படுத்த பிக்குகள் குழு முயற்சிக்கும்

## ஜனாதிபதி, அமைச்சர்களுடன் விரிவாகப் பேச்சு நடத்தும்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 27

யாழ்ப்பாணம் வந்து திரும்பிய பௌத்த பிக்குகள் குழுவினர் கொழும்பில் ஜனாதிபதி மற்றும் முக்கிய அமைச்சர்களைச் சந்தித்து விரிவாகப் பேச்சு நடத்துவர். அவர்கள் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான ஆக்கபூர்வ முயற்சிகளிலும் ஈடுபடுவர்.

கொழும்பு புறப்படுவதற்கு முன்னர் பௌத்த தூதுக்குழுவினர் இவ்வாறு உறுதியளித்ததாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் தலைவர்களுடன் விரிவாக — மூன்று கட்டங்களில் — பேச்சு நடத்திய

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கடற்படையினர் தீவிர ரோந்து

பருத்தித்துறை கடற்பிராந்தியத்தில் நேற்று முன்தினம் சனி இரவு கடற்படையினரின் படகு ரோந்து அதிகரித்துக் காணப்பட்டது.

ரோந்து சென்று கொண்டிருந்த கடற்படையினர் குடிமனைப் பகுதிகளை நோக்கி பீரங்கி ஷெல் தாக்குதல்களையும், துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

## 3ஆம் கட்ட பேச்சின் பின் பிக்குகள் குழு புறப்பட்டது

யாழ்ப்பாணம் வந்திருந்த பௌத்த பிக்குகள் குழு விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் மூன்றாம் கட்ட பேச்சுக்களை நடத்திய பின்னர் நேற்று நண்பகல் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டது.

நேற்றைய மூன்றாம் கட்டப் பேச்சுக்கள் சுமார் இரண்டு மணி நேரம் நீடித்தன.

நேற்றைய பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா (மாத்தயா), செயலதிபர் திரு. யோகரட்ணம் யோகி, அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன், 'விடுதலைப் புலிகள்' ஆசிரியர் திரு. ரவி, யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, திருமதி அடேல பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பௌத்த பிக்குகள் குழுவினர் மூன்றாம் கட்டப் பேச்சுக்கள் முடிந்த பின்னர், பிற்பகல் 2 மணியளவில் பலாலி வழியாக விமானத்தில் கொழும்பு நோக்கிப் புறப்பட்டனர்.

பௌத்த குழுவினர் யாழ்ப்பாணத்தில் நான்கு நாட்கள் தங்கியிருந்த போது அவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்கிய விடுதலைப் புலிகள் அவர்களை சிறந்த முறையில் உபசரித்து வழியனுப்பி வைத்தனர். [உ]

## புலிகளின் நிலைப்பாட்டை உலகுக்கு வெளிப்படுத்துவர்

யாழ்ப்பாணம், ஏப் 27

பௌத்த தூதுக் குழுவினர் கொழும்பு சென்றதும் அங்கு வெளிநாட்டு, உள்நாட்டு பத்திரிகையாளர் மாநாடு ஒன்றைக் கூட்டுவர். தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றியும் விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாடு பற்றியும் அவர்களுக்கு எடுத்து விளக்குவர்.

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுவதற்கு முன்னர் பௌத்த பிக்குமார் தூதுக் குழு இவ்வாறு தகவல் வெளியிட்டதாக அறியவந்தது.

## புதிய தீர்வுத் திட்டத்துடன் பிக்குகள் குழு விரைவில் வரும்

யாழ். வந்து திரும்பிய பௌத்த பிக்குகள் தூதுக்குழு புதிய — விரிவான — ஆக்கபூர்வமான — ஒரு தீர்வுத் திட்டத்துடன் மீண்டும் விரைவில் யாழ்ப்பாணம் வரும்.

கொழும்பு திரும்ப முன்னர், விடுதலைப் புலிகளின் தலைவர்களிடம் நேற்று அவர்கள் இத்தகவலை வெளியிட்டனர்.

முதல் யாழ். விஜயத்தின் போது தாங்கள் சமர்ப்பித்த தீர்வுத் திட்டத்தில் பல குறைபாடுகள் இருப்பதை ஏற்றுக் கொண்ட பிக்குகள் குழுவினர்; தாம் புதிய திட்டம் ஒன்றைத் தயாரிக்கவிரும்புவதாகவும்—

தமது சமாதான முயற்சி தொடரும் என்றும் — தெரிவித்தனர். [உ]

## குடாக்கடலில் கடற்படைக் கப்பல்

குருநகர், ஏப். 27

குடாக்கடல் பிரதேசத்தில் கடற்படைக் கப்பல் ஒன்று தரித்து நிற்பதாக அறியவருகிறது.

பாலைதீவுக்கும் ஒரு கரைக்கும் நடுவே கடந்த வியாழன் முதல் கப்பல் நங்கூரமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [ஒ-51]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஏப். 27

தீவகப் பகுதியில் கடந்த 20 ஆம் திகதி விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் படையினருக்கு இழப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மோதலின்போது புலிகள் தரப்பில் வீரவேங்கை புனிதன் [நமசிவாயம் ஸ்ரீபரன் — புங்குடுதீவு] களப் பலியானார். [ஒ]

## புதிய 'பாஜ்'

வடமராட்சி, ஏப். 27

பருத்தித்துறை இறங்கு துறைக்கு அமேசன் கப்பல் மூலம் புதிய மிதவைப் படகு 'பாஜ்' ஒன்று எடுத்துவரப்பட்டுள்ளது அதேவேளை பழுதடைந்த நிலையில் இருந்த ஒரு 'பாஜ்' திருத்த வேலைக்காக இங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டது. [ஓ-165]

## முல்லையில் 6 படையினர் பலி!

கொழும்பு, ஏப். 27

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாய் இராணுவ முகாம் படையினர் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் குறைந்தது ஆறு படையினர் கொல்லப்பட்டனர் என்றும்—

விடுதலைப் புலிகள் வைத்த மூன்று கண்ணி வெடிகளில் சிக்கி பல படையினர் படுகாயம் அடைந்தனர் என்றும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-எ]

## தெரிவுக்குழுவுக்கு மேலும் இருவர்

கொழும்பு, ஏப். 27

இனப்பிரச்சினை தீர்வுக்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு மேலும் இரு அங்கத்தவர்களை நியமிக்க சுதந்திரக் கட்சி முடிவு செய்துள்ளது என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

## தந்தை செல்வாவின் தூபிக்கு மக்கள் நேற்று மலராஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப். 27

தந்தை செல்வாவின் 15 ஆவது நினைவு தினத்தை ஒட்டிய நிகழ்ச்சிகள் நேற்று யாழ்நகரில் சிறப்பாக நடைபெற்றன.

யாழ். முற்றவெளிக்கு அருகே தந்தை செல்வாவின் நினைவு தூபிக்கு மலரஞ்சலி செலுத்துவதுடன் காலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. யோகரத்தினம் யோகி மங்கள விளக்கேற்றினார். விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி திரு. செல்வராசா மலரஞ்சலி செய்யும் நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தார்.

பல பிரமுகர்களும் பொது மக்களும் நினைவுத் தூபிக்கு மலர் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து பண்டிதர் கணபதிப்பிள்ளையின் தலைமையில் அங்கு இடம்பெற்ற நினைவஞ்சலிக் கூட்டத்தில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர். [உ-15]

## நினைவுக் கூட்டத்தில் திரளான மக்கள்

யாழ்ப்பாணம், ஏப். 29

நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் நேற்று மாலை நடைபெற்ற தந்தை செல்வாவின் பதினைந்தாவது நினைவு விழாவில் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

நீண்ட கால இடைவெளியின் பின் தந்தை செல்வாவின் நினைவுக் கூட்டம் மிகப் பிரமாண்டமான முறையில் நேற்று நடைபெற்றது.

தந்தை செல்வாவின் உருவப் படத்துக்கு மலர் மாலை சூட்டும் வைபவத்துடனும் மங்கள இசையுடனும் நினைவுக் கூட்டம் ஆரம்பமானது.

திரு. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நினைவுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் பிரமுகர்களான திரு. யோகரத்தினம் யோகி, கவிஞர் வாஞ்சிநாதன் திரு. பரா, திரு. இளம்பரிதி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

திரு. ச. அ தர்மரத்தினம், வண. பிதா அ. ஜெயக்குமார், புலவர் வேல்மாறன், வைத்திய கலாநிதி திலகவதி கோபாலகிருஷ்ணன், திரு. செ. கோடீஸ்வரன், சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. ஐ. சச்சிதானந்தன், திரு. க. சொக்கலிங்கம் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் நினைவுரையாற்றினர்.

கவியரங்கம், நாடகம் ஆகியனவும் இடம்பெற்றன. [அ-5]

## மாந்தையில் ராணுவம் முன்னேற முயற்சி

### புலிகள் விரட்டியடித்தனர்

யாழ்ப்பாணம், ஏப். 27

மன்னார் மாவட்டம் மாந்தை முகாமில் இருந்து நேற்று முன்தினம் காலை 8.45 மணியளவில் இராணுவத்தினர் முன்னேற முயன்ற சமயம் பெரும் மோதல் வெடித்ததாகத் தெரியவருகிறது.

முகாமில் இருந்து 500 யார் தொலைவில் அவர்களை விடுதலைப் புலிகள் வழிமறித்து தீவிர தாக்குதலைத் தொடுத்தனர் என்றும்—

பல மணி நேரமாக நடந்த மோதல்களை அடுத்து இராணுவத்தினர் பின்வாங்கி முகாமுக்குத் தப்பி ஓடினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மோதல்கள் நடந்து கொண்டிருந்த சமயம் முகாமில் இருந்து சரமாரியான ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றதாகவும்—

பிற்பகல் 2 மணியளவில் இராணுவத்தினர் பின்வாங்கி முகாமை நோக்கி தப்பி ஓடிய வேளையோடும், நவகிரிக்குள மாதிரிக் கிராமம், நானாட்டான் பகுதி முகாம்களைச் சேர்ந்த படையினர் பலத்த ஷெல் வீச்சுக்களை நடத்தினர் என்றும் தெரியவந்தது. [ஒ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்'

# ★ மணி விழா ★

தமிழ்மணி

சுப. கணேசசுந்தரன் - சண்முகவடிவு

தம்பதிகள்

இடம்: நல்லை ஆதீன கலாமண்டபம்

காலம்: 27-04-1992 (இன்று) மாலை 3 மணி

சொற்பொழிவு, வில்லிசை, இன்னிசைக் கச்சேரி ஆகியன இடம்பெறும்.

[20735]



## புதிய உயர் கல்லூரி

[*New College of High Studies*]

ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம்.

யாழ். பல்கலைக்கழகத்தினால்

வெளிவாரிப் பட்டப் படிப்பிற்கு பதிவு செய்து கொள்வதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதற்கான

G. A. Q. கலை முதற் கலை தேர்வு

1st in Com. வணிக முதற் தேர்வு

விண்ணப்ப முடிவு திகதி 06—06—1992.

அன்றைய தினமே விரிவுரைகள் ஆரம்பமாகின்றன. விவரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி:

எஸ். அருள்நங்கை

(சி/2227)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

ஒளி விசியது: 06 — 09 — 1961



ஒளி அணைந்தது: 28 — 03 — 1992

அமரர்

### கந்தசாமி மணிராஜ் (மணி)

கண்ணுக்கினியாயென் கருத்துக்கினியாய் நீ!
விண்ணுக்கினியனாகி விட்டாய் - மண்ணில்
இனியென்னைக் காப்பாற்ற இவ்வுலகில் யாருளர்
தணியாதோ என் துயரந்தான்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி (ஜெயா),
பிள்ளைகள்: விமல்ராஜ், கமல்ராஜ்,
தர்ஷினி, இராகுல்ராஜ் அப்பா,
அம்மா, தம்பிமார், தங்கைமார்,
மாமா, மாமி, மச்சான், மச்சாள்மார்,
மைத்துனர், மற்றும் உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

52, லோட்டஸ் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

[20734]

## வவுனியா டிப்போ மக்கள் மயம்

வவுனியா, ஏப். 27

வவுனியா டிப்போ நாளை 28 ஆம் திகதி மக்கள் மயப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. வடக்கில் மக்கள் மயப்படுத்தப்படும் முதலாவது டிப்போ இதுவாகும்.

இந்த டிப்போவின் நிர்வாகத்தை அதன் ஊழியர்களிடம் கையளிக்கும் வைபவம் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் ஜனாப் யூ.எல்.எம். பாரூக் தலைமையில் நடைபெறும்.

மக்கள் மயப்படுத்தப்படும் 84 ஆவது பஸ் டிப்போ இதுவாகும். [இ-த]

## விசர்நாய்க் கடிக்கு மற்றும் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஏப் 27

விசர்நாய்க் கடிக்கு இலக்கான ஒருவர் நேற்று முன்தினம் யாழ் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

மாகியப்பிட்டியைச் சேர்ந்த நல்லதம்பி [வயது 55] என்பவரே மரணமானவராவார்.

ஓராண்டுக்கு முன்னர் நாய்க்கடிக்கு இலக்கான இவர், அதற்குத் தகுந்த சிகிச்சை பெற்றுக் கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. [உ-15]

## மாணவருக்கு இலவச சீருடை

இலவச சீருடைகள் பெற்றுக் கொள்ளவிரும்பும் மாணவர்களின் விவரங்களை அனுப்பி வைக்கும்படி கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சு பாடசாலைகளின் அதிபர்களைக் கேட்டுள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபத்தை அமைச்சு அதிபர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது. [இ-எ]

## சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்

கூட்டுப்படைத் தலைமையக குண்டு வெடிப்பு சந்தேக நபரான சங்கரப்பிள்ளை பாலச்சந்திரன் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எல். என். டி. ஜெயசூரிய முன் புதன்கிழமை ஆஜர் செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடம் குற்றப் பத்திரிகை அன்று கையளிக்கப்பட்டது. [இ-3]

## திருகோணமலை கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடம்

கொழும்பு, ஏப். 25

திருகோணமலை பிராந்திய கல்விப்பணிப்பாளர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்காக வடக்கு கிழக்கு மாகாண கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இப் பதவிக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு 2 இல் உள்ள அதிகாரிகள் விண்ணப்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## முற்றோதல் போட்டி

தொல்புரம், சர்வோதயத்தினர் ஆத்திசூடி மனனம் செய்து முற்றும் ஓதும் போட்டியை புலவர் நா. சிவபாதசுந்தரனார் தலைமையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடத்தினர்.

வட்டுக்கோட்டை, பொன்னாலை, தொல்புரம், சுழிபுரம் ஆகிய இடங்களைச் [illegible] போட்டியில் பங்குபற்றினர். (த-28)

## கிராம சேவையாளர்களுக்கு புதிய சம்பளத் திட்டம்

கொழும்பு, ஏப். 27

கிராமசேவை அலுவலர்களுக்காக புதிய சம்பளத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. முதலாம், இரண்டாம் தரங்களுக்கு மேலதிகமாக அதி உயர்தரம் ஒன்றும் உருவாக்கப்படும். ஒவ்வொரு அரசாங்க அதிபர் பிரிவிலும் ஒருவர் அதி உயர் தரப் பதவியை வகிப்பார்.

அதி உயர்தரத்திற்கான அடிப்படைச் சம்பளம் ஆண்டொன்றிற்கு 33 ஆயிரம் ரூபாவாகும்.

முதலாம் தரத்தில் 3 ஆண்டுகள் சேவையைப் பூர்த்தி செய்வதற்கென நடத்தப்படும் போட்டிப் பரீட்சை ஒன்றின் மூலம் அதி உயர் தரத்திற்கான 80 சத வீத வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

அதி உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்றாண்டு கால சேவையைப் பூர்த்தி செய்த கிராம அலுவலர்கள் இலங்கை நிர்வாக சேவையில் சேர்ந்து கொள்வதற்காக நடத்தப்படும் எழுத்துப் பரீட்சையில் தோற்ற தகுதி பெற்றவர்களாவர்.

பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா கடந்த வெள்ளி நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் முன்கண்ட விவரங்களைத் தெரிவித்தார்.

இந்த ஆலோசனைக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-த)

## விடைத்தாள்கள் கொழும்புக்கு

தற்சமயம் நடைபெற்று வரும் ஜி. சீ. ஈ. [உயர்தர] விசேட பரீட்சை விடைத்தாள்கள் அடுத்த மாதம் 7 ஆம் திகதி கப்பல் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படவிருக்கின்றன. [த-3]

## கடிதப் பார்சலில் தங்கம் கடத்த முயற்சி!

விமானக் கடிதப் பார்சல் மூலம் 35 லட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை கடத்த எடுத்த முயற்சியை சுங்க அதிகாரிகள் முறியடித்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் உள்ள நிறுவனம் ஒன்றுக்கு, சிங்கப்பூரில் இருந்து அந்தப் பார்சல் விமானம் மூலம் அனுப்பப்பட்டிருந்தது. (த-எ)


## தீவக பாக்கியம் குழந்தைகள் சிகிச்சை நிலையம்

கே. கே. எஸ். வீதியில் மனோகராச் சந்தியில் இருந்து 100 யார் தொலைவில் காலை 8 30 தொடக்கம் பிற்பகல் 1-30 வரையும். கல்வியங்காட்டிலிருந்து ஒரு மைல் தொலைவிலுள்ள இருபாலைச் சந்தியில் காலை 8-30 தொடக்கம் மாலை 6-30 வரையும் சேவையாற்றும்.

[20739]



## உயர்கலைக் கல்லூரி

ஆனைப்பந்தி.

(கல்விப் பகுதியினரின் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட உதவி நன்கொடை பெறாத சிரேஷ்ட பாடசாலை)

O/L பகல் முழு நேர வகுப்புக்கள்

ஆரம்பம்: 04 - 05 - 1992 காலை 8 மணி

★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

★ விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

[சி 1955]



## பாமோசை

இசைமன்றத்தின் ஆதரவில்

மாதாந்த இசைக் கச்சேரி

இடம்: நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயம்

காலம்: 5.30 — 6.30
28 - 04 - 1992 (செவ்வாய்)

நிகழ்ச்சி

பாட்டு: வதனசோதி ஆறுமுகம்
வயலின்: கண்ணாம்பாள் பாக்கியராஜா
மிருதங்கம்: S. துரைராஜா
கடம்: S. நாகராஜன்

[20743]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ கட்டுப்பாட்டு பகுதிகளில் அகதிகளை குடியமர்த்த முயற்சி

கொழும்பு, ஏப். 27

இந்தியாவில் இருந்து இலங்கை திரும்பும் தமிழ் அகதிகளை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் குடியமர்த்துவதற்கே அரசாங்கம் முயற்சிக்கும்.

இந்தியாவில் இருந்து இலங்கை திரும்பும் தமிழ் அகதிகள் விடுதலைப் புலிகளிடம் இருந்து மீட்கப்படாத பகுதிகளில் குடியேறுவதற்கு ஆர்வம் காட்டக் கூடாது என்று வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

இந்த விஷயம் தொடர்பாக செய்தியாளர்களிடம் கூட்டுப்படைத் தலைமையக அதிகாரி கேர்ணல் சரத் முனசிங்க விவரிக்கையில்—

''தாயகம் திரும்பும் தமிழ் அகதிகளை விடுதலைப் புலிகளிடம் இருந்து மீட்கப்படாத பகுதிகளில் குடியேற வேண்டாம் என்று பாதுகாப்புப்படையினர் அறிவுறுத்தப் போகின்றனர்.

விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்படாத பகுதிகளை மீட்டெடுக்கப் படையினர் திட்டமிட்டுள்ளனர். எந்த நேரத்தில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்பதைக் கூற முடியாது''— என்று தெரிவித்தார்.

[இ-எ]

## தொலைக்கல்வி பயிற்சி இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப். 27

தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி (உதவி ஆசிரியர்) இறுதிப் பரீட்சை இன்று திங்கட்கிழமை தொடக்கம் 30 ஆம் திகதி வரை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

வேம்படி மகளிர் கல்லூரி பரீட்சை நிலையமும் இந்துக் கல்லூரிக்கு மாற்றப்பட்டிருப்பதால், சகல பரீட்சார்த்திகளையும் இந்துக் கல்லூரி பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுமாறு தொலைக்கல்வி சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. அலெக்ஸாண்டர் அறிவித்துள்ளார்.

[ஒ-11]

## புனர்வாழ்வு நடவடிக்கைக்கு அரசு நிதி ஒதுக்க வேண்டும்

### பௌத்த குருமாரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 27

'இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்த மக்களின் தொழில் இன்மை, அடிப்படை வசதியின்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு புனர்வாழ்வு நடவடிக்கைக்கு அரசு உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்'

இப்படியான கோரிக்கை ஒன்றை இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகம் விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ள பௌத்த குருமார்களை சந்தித்த இந்தக் கழகத்தினர் சமர்ப்பித்த மகஜரிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

★ வடக்கு - கிழக்கில் யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும்.

★ தீவகத்தில் அமைக்கப்பட்ட இராணுவ முகாம்களை அகற்றி இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியேற வழி செய்ய வேண்டும்.

[த-3]

## ருக்மனின் கட்சியை ஐ.தே.கவில் சேர்க்க செயற்குழு முடிவு

கொழும்பு, ஏப். 27

ருக்மன் சேனநாயக்கா தலைமையிலான ஐக்கிய இலங்கை மக்கள் கட்சி உறுப்பினர்களை ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்த்துக் கொள்வதென ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு முடிவு செய்துள்ளது.

இந்தக் கட்சியின் தலைவர், செயலாளர் உட்பட 50 உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்வதெனவும் ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

[த-3]

## எதிர்க்கட்சி மேதின விழா; லலித் அணியும் பங்குபற்றும்

கொழும்பு, ஏப். 27

எதிர்க்கட்சிகள் நடத்தும் கூட்டு மேதின விழாவில் லலித் அணியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் பங்குபற்றும் என்று அறிவிக்கப்படுகிறது.

சுதந்திரக்கட்சி நாடாளுமன்றக்குழு இதனை ஏகமனதாக ஏற்றுள்ளதாக அக்கட்சியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

கூட்டு மேதினக் கூட்டத்தில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்த்துக் கொள்வது இல்லை என்று சுதந்திரக் கட்சி நாடாளுமன்றக்குழு முடிவு செய்திருப்பதாக அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகளில் உண்மை இல்லை என்றும் அவர் கூறினார்.

[த-எ]

## மணி விழா

யாழ்ப்பாணம், ஏப். 27

தமிழ் மணி சுப. கணேசசுந்தரனின் 60 ஆவது ஆண்டு சிவத்தமிழ்ப் பணியைப் பாராட்டும் மணிவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லை ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறும். நிகழ்ச்சியில் வில்லிசை, இசை விருந்து ஆகியவையும் இடம் பெறும்.

[த]

## காணாமற் போவோர் பற்றி மீண்டும் முறைப்பாடுகள்

ஆட்கள் காணாமற் போன சம்பவங்கள் தொடர்பாக புதிதாக முறைப்பாடுகள் மனித உரிமைகள் பணியகத்துக்கு கிடைத்து வருவதாக பணியகத்தின் தலைவர் திரு. ஜே. எப். ஏ. சூஸா தெரிவித்தார்.

பொலீஸ் நிலையங்கள் மற்றும் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பணியகம் திட்டவட்டமான நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகவும் அவர்கள் துன்புறுத்தலுக்கு ஆளாகாமலும் அவர்களின் மனித உரிமைகள் மீறப்படாமலும் பணியகம் பார்த்துக் கொள்ளும் என்றும் திரு. சூஸா சொன்னார்.

[த-எ]

## தபால் சேவை மாகாண மட்டத்தில்

கொழும்பு, ஏப். 27

மே மாதம் முதலாம் திகதியில் இருந்து தபால் சேவைகள் மாகாண மட்டத்தில் பன்முகப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி 9 மாகாணங்களுக்கும் 9 மாகாண பிரதித் தபால் மா அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

[இ-எ]

# நூறு கலைஞர்கள் பங்குபற்றும் ஐந்து நாள் தமிழிசை விழா

## நல்லூரில் 2ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 27

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழக ஏற்பாட்டில் எதிர்வரும் 2 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரை நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் இடம்பெற உள்ள தமிழிசை விழாவில் நூறு இசைக் கலைஞர்கள் இன்னிசை விருந்தளிப்பார்கள். ஐந்து நாள் தமிழிசை விழாவில் புகழ் வாய்ந்த 16 பாடகர்கள் பாடுகிறார்கள். இப் பாடகர்களுக்கு அணி செய் வாத்தியக் கலைஞர்களாக 40 கலைஞர்கள் பங்குபற்றுவார்கள்.

இசைக் கலைஞர்களுடன் தலைசிறந்த நாதஸ்வரக் கலைஞர்களும் இசை விழாவில் பங்குபற்றி கச்சேரிகள் நடத்துவார்கள். வயலினிசை, கெஞ்சின் கச்சேரிகளும் விழாவில் இடம்பெறும்.

இசை விழா நிகழ்ச்சிகள் நாளாந்தம் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்.

தமிழீழத்தின் சிறப்பு மிக்க இசை விற்பன்னர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து இவ் விழாவை அணி செய்கிறார்கள். இசைத்துறை சார்ந்த அறிஞர்கள், இத் தமிழிசை விழா அரங்கில் கலந்து கொண்டு இசைபற்றிக் கருத்துரையாற்றுவார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் இவ் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

நீண்ட காலத்திற்குப் பின் மிகப் பிரமாண்டமான தமிழிசை விழாவாக இவ்விழா அமைகின்றது. மண்ணின் மீதும், போராட்டத்தின் மீதும் பற்றுக்கொள்ள வைக்கும் தமிழிசை விழாவாகவும், தமிழுக்கும், இசைக்கும் ஒரு பெருவிழாவாகவும் இது அமையும். இவ் விழாவில் இசை இன்பம் பெற்றிடவும், விழாவைக்கண்டு இன்புறவும் ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கூடும் மக்களின் வசதி கருதி அதற்கான ஏற்பாடுகள் முன் கூட்டியே நடைபெறுகின்றன.

[இ-எ]


## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10 — 09 — 1909

மறைவு: 09 — 05 — 1991

**அமரர் நல்லதம்பி பொன்னம்மா**


ஆண்டு ஒன்று சென்றாலும்,
உங்கள் நினைவு எங்களை விட்டகலாது.
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;

மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

இல. 30, பிறஸ் லேன்,
கொக்குவில்.

(20727)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 24 — 10 — 1943

உதிர்வு: 20 — 04 — 1990

**அமரர் இராசா சுப்பிரமணியம்**

அன்புத் தெய்வமே! ஆண்டு இரண்டாகியும் தங்களின் நினைவில் நிஜமாய், மரணிக்காமல். நித்தமும் நாம் மரணிக்கின்றோம், எம் துயரம் உம்செவி ஏறாதா?

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள், சகோதரர்கள்,
உறவினர்கள்.

கந்தையா உபாத்தியார் வீதி,
சுந்தரோடை, சுன்னாகம்.

[20554]

## ★ திருமண அழைப்பு ★

மணமகன்: தருமலிங்கம் முத்துராசா (இராசன்)

மணமகள்: அரியரத்தினம் கௌரி

இடம்: இணுவில் கிழக்கு,

காலம்: சித்திரை மாதம் 17 ஆம் நாள் (29 - 04 - 1992)
புதன்கிழமை பகல் 11 மணி —11.55 வரை

★ உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

மு. தருமலிங்கமும் பாரியாரும்,
பிள்ளையார் ஸ்ரோர்ஸ் அன் -
கிறைண்டிங் மில்,
(இணுவில் கிழக்கு)

செ. அரியரத்தினமும் பாரியாரும்,
(இணுவில் கிழக்கு).

(தனிப்பட்ட அழைப்புகள் இல்லை) (20555)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அப்பியாசக் கொப்பிகள், C. R கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. மண்டேலா புத்தக சாலை, இல. 2, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். அரஸ் புத்தக நிலையம், இல. 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
[20681]

நல்ல இனப் பாலாடு '2போத்தல்' மறிக்குட்டியுடன் விற்பனைக்குண்டு. இராமலிங்கம், 199, கோவில் வீதி, முதலியார் வளவு, நல்லூர், யாழ்ப்பாணம். [20718]

### மணமகள் தேவை

ஜேர்மனியில் பயிற்றப்பட்டு கனடாவில் இயந்திர நுட்பவியலாளராக வேலை செய்யும் 29 வயது மணமகனுக்கு பெற்றோர் 23 வயதிற்கு மேற்படாத மணமகளைத் தேடுகின்றனர். விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இல. 401, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [20721]

### மணமகன் தேவை

30 வயது, சைவ போசனமுடைய, சதய நட்சத்திரத்தில் பிறந்த, A/L படித்த பெண்ணுக்கு மணமகன் தேவை. மணமகன் உள்நாட்டில் அரசாங்க அல்லது கம்பனியில் வேலை செய்பவராக இருத்தல் வேண்டும். இலட்சுமி திருமண சேவை. செ. விசியரத்தினம், நவாலி கிழக்கு, மானிப்பாய்.
[20740]

### இன்று செவ்வாய் மாற்றம்

இன்று முதல் வியாழபகவானின் சுகபார்வையை யுத்தச் செவ்வாய், புதன், வெள்ளி, சூரியன் பெறுவதால் வரட்சி, வெப்பம் நீங்கும். குண்டு வெடிப்புகள் தணியும். மழை பொழியும், அமைதி நிலவும். பூபாலசிங்கம், சோபிதா புத்தகசாலைகள் யாழ்ப்பாணம். நூலாசிரியர்: சத்தியதாஸன்.
(20738)

### தேவை

கரியில் பாவிக்கும் பித்தளை பொயிலர் புதியது, பழையது தேவை. தொடர்பு கொள்ளவும் ஹோட்டல் றொலெக்ஸ், 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[20694]

## குளங்கள் புனரமைப்பு

வரணி, ஏப். 27

வரணிப் பிரதேசத்தில் இயங்கும் தற்சார்பு வளர்ச்சிக் கழகங்கள் மூலம் அவ்வப் பகுதியில் உள்ள குளங்களில் இருந்து வண்டல் மண் அகற்றும் வேலைகளுக்கு ஊற்று நிறுவனம் உதவி செய்ய இருக்கின்றது. இதன் ஆரம்ப கட்டமாக அவ்வப்பகுதி குளங்களின் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. (ஒ-170)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 06 — 10 — 1926



மறைவு: 27 — 04 — 1991

அமரர்

**பிரகாசம் அமிர்தம்**

[பிரபல வர்த்தகர், ஊர்காவற்றுறை]


அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய், குடும்பத்தின் குல விளக்காய்
எமக்கு அறிவூட்டி, வழிகாட்டி - எங்களை வாழவைத்த தெய்வமே! - நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எம் உயிருள்ளவரை நிலைத்திருக்கும்.

நினைவு திருப்பலிகள் — கொழும்பு புதிய செட்டித்தெரு, வியாகுல மாதா ஆலயத்தில் காலை 6-00 மணிக்கும், உடுவில் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் [ARK] காலை 6-30 மணிக்கும் நடைபெறும்.

இவரின் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார்,
உறவினர், நண்பர்கள்,

107, சுருவில் வீதி,
ஊர்காவற்றுறை. [20552]

## 4 ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



**லெப். முரளி (சாள்ஸ்)**

(கந்தவனம் தவக்குமார்)

மண்ணில்: 10—04—1963 விண்ணில்: 27—04—1988

திதி: 12 - 05 - 1992

நாலு ஆண்டுகள் சென்றாலும், நாலு நிமிடம் கூட உன்னை மறக்க முடியவில்லையே! உப்பு வெளிக் காற்று உன் பெயர் சொல்லி வந்து வீசுகிறது, உன் கனவு, நினைவெல்லாம் தமிழீழத் தாயகமே முரளி! உன்கனவு நனவாக நாமெல்லாம் இறைவனை வேண்டுகிறோம். உனக்கும் உன்னுடன் உப்பு வெளியிலே உடன் வந்த உனது நண்பர்கள் மோகன் மாஸ்டர், பட்சம் ஆகியோருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்-

பாசமுடன்:
அப்பா, அம்மா, அண்ணா,
அண்ணி, அக்கா, அத்தான்,
மருமகள் நிலுஜா.

'ஜெயமலரகம்',
தவக்குமார் வீதி,
கப்புது,
கரவெட்டி.
(20673)

## நினைவஞ்சலி





நெல்லியடி திருமகள் ஸ்ரோர்ஸ்

அமரர்

**மு. வல்லிபுரம்**

(தாபகர்)

மண்ணுறவு: 12 — 03 — 1919
விண்ணுறவு: 08 — 05 — 1991
திதி: 27 — 04 — 1992

அமரர்

**வ. சிவசோதி**

(உரிமையாளர்)

மண்ணுறவு: 18 — 05 — 1943
விண்ணுறவு: 13 — 06 — 1989

திருமகள் தலைமகன் ரத்தினம், தவமகன்
திருமகன் சிவசோதி எனுமிரு கொடையினர்
இறையடி கண்டனர், இருண்டது இருதயம்
பெறலரும் பெரியவன் ரத்தினம் என்கிற
வல்லிபு ரப்பெரும் வல்லவன் பேற்றினை
வேண்டிப் பிரிந்து ஆண்டோன் றானது
வேண்டுவோம் இறையடி சாந்தி! சாந்தியே!!

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

திருமகள் சோதி வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தியாளர், விற்பனை கூட்டுறவுச் சமாசம் (வ.து)

## பதவி வெற்றிடம்

**லிகிதர்:** இல. 302 : 13

**சம்பளத்திட்டம்:**

730 — 20 X 10 : 25 X 5 — 1055

**தகைமைகள்:**

கூட்டுறவு வேலையாளர் 14ஆவது சம்பளத் திட்டத்தின் லிகிதராக இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவமுள்ளவர்.

அல்லது

க.பொ.த: [சாதாரண தரம்] 5 திறமைச் சித்திகளுடன் தூயகணிதம் / வர்த்தக எண்கணிதம் / கணிதம் / தமிழ்மொழி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்று இருத்தல் வேண்டும்.

**வயது:**

23 — 40 வயதுக்குட்பட்டவர்.

கூட்டுறவு சங்கங்களில் பணிபுரிவோருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது. ஆனால் பணியாளர்கள் தங்கள் சங்க மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்களை, பிறப்புச் சாட்சிப் பத்திரம், கல்வித் தகைமை, அனுபவம் உட்பட தாங்களே தயாரித்து பிரதிகள் இணைத்து ''யாழ். மாவட்ட விவசாய உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவு சமாசம்'', 201/1, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்'' என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் ஒப்படைக்குமாறும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''லிகிதர் பதவிக்கான விண்ணப்பம்'' எனவும் எழுதப்படல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 04 — 05 — 1992**
பிற்பகல் 3 மணிக்கு முன்பு

- பொது முகாமையாளர்.

[இ-2229]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சீரழிவே முடிவு

1987 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தீவிரவாத நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களை அரசாங்க சேவையில் சேர்க்கும் போது விசேட புள்ளிகள் வழங்க வேண்டும்.

இவ்வாறு பொது நிர்வாக அமைச்சு அண்மையில் வெளியிட்ட சுற்று நிருபம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1988, 1989 ஆம் ஆண்டுகளில் ஜே.வி.பி. வன்செயல்கள் மிக உச்சக் கட்டத்தில் இருந்த காலை, அவற்றால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு உதவுவதற்கான ஒரு திட்டமே இது என்பது தெளிவாகப் புரிகிறது.

1988, 89 ஆம் ஆண்டுகளில் ஜே.வி.பியினரின் வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களில் ஐ.தே.க. ஆதரவாளர்களே மிகப் பெரும்பான்மையினர்.

அந்தக் கால கட்டத்தில் ஆளுங்கட்சி ஆதரவாளர்கள் ஜே.வி.பியினரால் பாதிப்புற, ஆளுங்கட்சிக்கு விரோதமானவர்கள் கறுப்புப் பூனைகள், பச்சைப் புலிகள் மற்றும் அரசாங்கப்படைகளின் அக்கிரமத்தினால் அழிக்கப்பட்டனர்.

ஜே.வி.பியினரால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சலுகை வழங்கும் அதே வேளை, அரசாங்கப் பயங்கரவாதத்தால் பாதிப்புற்றோருக்கு எவ்வித நிவாரணமும் இல்லை. அரசாங்கத்தின் சமதர்மமும், நீதியும், தார்மீகமும் இந்த இலட்சணத்தில் தான் உள்ளன!

தமிழ்ப் பகுதிகளில் அரசாங்கப் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டோர் நிலைமை தெற்கில் பாதிக்கப்பட்ட ஆளுங்கட்சி எதிர்ப்பாளர்களின் நிலைமையைவிட மிகவும் மோசமானதாகும்.

வடக்கு-கிழக்கில் அரசாங்கப் பயங்கரவாதம் பச்சையாக, அப்பட்டமாக நடந்து வருகிறது. அரச பயங்கரவாதத்தினால் பாதிக்கப்படுபவர்கள் தமிழர்களே.

அரசாங்க பயங்கரவாதத்தினால் இடம்பெயர்பவர்கள், அகதிகளாவோர், உறவினர்களை இழப்போர், உடைமைகளை இழப்போர் என்று பல வகைகளாலும் வாழ்வுரிமை மறுக்கப்படுபவர்களும் தமிழர்களே.

ஆனால் அரச பயங்கரவாதத்தால் பாதிக்கப்படும் தமிழர்களுக்கு [உலர் உணவு தவிர] எவ்வித நிவாரணமோ சலுகையோ அரசிடமிருந்து கிடைப்பதில்லை.

வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கென வெளிநாடுகள் வழங்கும் உதவிகள், நிதிகள் தானும் தமிழர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டோர் என்ற அடைமொழியுடன் மிகக் குறைந்த எண்ணிக்கையான சிங்களவர்களுக்கே கொட்டிக்கொடுக்கப்படுகிறது! தமிழ்ப் பகுதிகளுக்கென வழங்கப்படும் உதவி சிறிதும் பாதிப்பு இல்லாத சிங்களப் பகுதிகளின் முன்னேற்றத்துக்கும் போய்ச் சேர்வதுண்டு.

சிங்களவருக்கு ஒரு நீதி; தமிழருக்கு வேறு நீதி என்ற அகர்மமே கொழும்பு ஆட்சியில் மேலோங்கி நிற்கிறது. அகர்மமும், அநீதியும் தொடரும்வரை இந்த நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் மலரமாட்டா. சீரழிந்து போக வேண்டியது தான்!

# மொழிகளை கற்பிக்கும் திறன் 50வீத ஆசிரியருக்கு இல்லை

## ஆய்வில் தெரியவந்துள்ளதாம்

கொழும்பு, ஏப் 27

சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளைப் படிப்பிக்க அரசாங்கப் பாடசாலைகளில் நியமிக்கப்பட்டிருக்கும் ஆசிரியர்களில் 50 சதவீதமானோருக்கு அம்மொழிகளைப் போதிக்கும் திறன் இல்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு அண்மையில் நடத்திய ஆய்வு ஒன்றில் இது தெரிய வந்துள்ளது.

ஆங்கில மொழி போதிக்கும் ஆசிரியர்கள் விஷயத்தில் இந்நிலை பரம் மிக மோசமாக உள்ளது என்றும் ஆய்வில் கண்டறியப்பட்டது.

மொழிகளைப் போதிக்கும் திறமை தமக்கு மிகக் குறைவாக இருப்பதால், வேறு பாடங்களைப் போதிக்கத் தம்மை அனுமதிக்கும்படி அந்த ஆசிரியர்கள் கல்வி அதிகாரிகளைக் கேட்டுள்ளனர் என்றும் அமைச்சு வட்டாரங்கள் கூறின.

சில ஆங்கில ஆசிரியர்களுக்கு know என்ற வார்த்தைக்கும் no என்ற வார்த்தைக்கும் உள்ள வேறுபாடு கூடத் தெரியவில்லை என்றும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் காரணமாக மொழி போதிக்கும் ஆசிரியர்களுக்கு ஓராண்டு கால அவசர பயிற்சி வழங்குவது என்று கடந்த திங்கட்கிழமை நடந்த சிரேஷ்ட கல்வி அதிகாரிகள் கலந்து கொண்ட மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

அரச பாடசாலைகளில் கடமைபுரியும் ஆசிரியர்களில் 45 சதவீதத்திற்கு அதிகமானோர் போதிக்கும் பயிற்சி பெறவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. [த-எ]

## அப்புத்தளையில்

# தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்த போராட்டம்

கொழும்பு ஏப். 27

அப்புத்தளை காகல்லை தோட்டத் தொழிலாளர்கள் கடந்த 9 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தோட்டத்தில் இடம்பெற்ற களவு தொடர்பாக, தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்தே அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமது போராட்டத்தை விஸ்தரித்து சத்தியாக்கிரகத்தில் இறங்க அவர்கள் முடிவு செய்துள்ளனர் என்று இ.தொ.கா. அப்புத்தளை கிளை அறிவித்துள்ளது. [த-3]

# உரிமைகளை வென்றெடுக்க நாம் அணி திரள்வோம்!

## மே தின ஏற்பாட்டுக் கூட்டத்தில் பரா

யாழ்ப்பாணம், ஏப். 27

தொழிலாளர்களை மட்டுமன்றி ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களையும் அடிமைப்படுத்தி எமது மண்ணை ஆக்கிரமிக்க இந்த அரசு துடியாய்த் துடிக்கிறது. இதனை எதிர்த்து எமது உரிமைகளை வென்றெடுக்க நாம் அனைவரும் ஒன்றுதிரள வேண்டும்.

யாழ். இந்துக் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மே தின ஏற்பாட்டுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போது விடுதலைப் புலிகள் மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. பரா இவ்வாறு கூறினார்.

உள்ளூர் ஆட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினர் ஆகியோருக்கான இந்த மேதின ஏற்பாட்டுக் கூட்டத்தில் தொடர்ந்து பேசுகையில் திரு பரா கூறியதாவது:

இன்றைய நெருக்கடிகளுக்கு முக்கிய காரணம் ஸ்ரீலங்கா அரசின் இராணுவ இன அழிப்பு நடவடிக்கைகளும் பொருளாதார தடைகளும் ஆகும்.

இவற்றை அம்பலப்படுத்தும் முகமாகவே நெருக்கடிகள் மத்தியிலும் மே தின விழாவை அனைவரும் ஒன்று கூடி கொண்டாட தீர்மானித்தோம்.

எமது உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டதை எடுத்துச் சொல்லவும்—

உயிர் வாழத் தமிழன் அருகதை அற்றவன் என்ற ஸ்ரீலங்கா அரசின் நிலைப்பாட்டை ஊருக்கு எடுத்துக் காட்டவுமே— நாம் மே தினத்தைக் கொண்டாடுகின்றோம்— இவ்வாறு அவர் சொன்னார். [த]

# உடுகம்பொல மீது சட்ட நடவடிக்கை; சில பொலீஸ் அதிகாரிகள் முஸ்தீபு

கொழும்பு, ஏப். 27

லஞ்சம் வாங்கினார்கள் என்று பிரதி பொலீஸ் மா அதிபர் பிரேமதாஸா உடுகம்பொலவினால் குற்றஞ் சாட்டப்பட்டதாகக் கூறப்படும் உயர் பொலீஸ் அதிகாரிகள் சிலர், திரு. உடுகம்பொல மீது சட்ட நடவடிக்கை எடுக்கத் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திரு. உடுகம்பொல அண்மையில் வெளியிட்ட அறிக்கையில், களியாட்ட விடுதி ஜோசிம் மற்றும் வர்த்தகப் புள்ளிகள் சிலரிடமும் லஞ்சம் வாங்கியதாகக் கூறப்படும் பொலீஸ் அதிகாரிகள் சிலரின் பெயர்களை வெளியிட்டிருந்தார்.

இக் குற்றச் சாட்டு காரணமாக தங்களால் உத்தியோகக் கடமைகளை சரியாகச் செய்வது கஷ்டமானதாக இருப்பதாக அப் பொலீஸ் அதிகாரிகள் கூறுகின்றனர். [த-எ]

# மேஜருக்கு முட்டை வீசிய மாணவனுக்கு அபராதம்

லண்டன், ஏப் 27

தேர்தல் பிரசாரத்தின் போது பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் மீது முட்டை வீச்சு நடத்திய மாணவன் ஒருவனுக்கு லண்டன் நீதிமன்றம் ஒன்று 175 டொலர் அபராதம் விதித்தது.

அத்துடன் முட்டை வீச்சினால் அழுக்கடைந்த திரு மேஜரின் உடைகளைச் சுத்தம் செய்வதற்காக 17.5 டொலர் பணத்தை பிரதமருக்கு வழங்கும்படியும் நீதிமன்றம் அந்த மாணவனுக்கு உத்தரவிட்டது.

கடந்த ஆறாம் திகதி பிரதமர் மேஜர் பிரசாரம் நடத்தச் சென்றபோது முட்டை வீச்சுக்கு இலக்கானார்.

முட்டை உடைந்து பிரதமரின் கழுத்து வழியாக அவரது உடைகளை நனைத்தது. முட்டைக் கோது திரு. மேஜரின் கன்னத்தில் கீறல்களையும் ஏற்படுத்தியது. (இ-எ)

# இலங்கைக் கடலில் இந்தியா எண்ணெய் அகழ்வாராய்ச்சி

## உடன்பாடு கைச்சாத்தாகும்

இலங்கைக் கடலில் எண்ணெய் அகழ்வாராய்ச்சி வேலைகளை மேற்கொள்வது தொடர்பான தனது யோசனைகளை இந்தியா கொழும்பு அரசிடம் சமர்ப்பித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இலங்கைக் கடலில் எண்ணெய் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளக் கூடியதாகக் கருதப்படும் பதினொரு பகுதிகளை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அடையாளங் கண்டு அறிவித்துள்ளது.

இவற்றில் பாக்கு நீரிணையை ஒட்டி இந்தியாவின் தென்முனைக் கடல் பகுதியில் ஒரிடத்திலும்—

மன்னாரில் இருந்து கல்பிட்டி வரையான கடல் பிரதேசத்தில் மற்றொரு பகுதியிலும் எண்ணெய் அகழ்வாராய்ச்சி செய்ய இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான உடன்பாடு இரு நாடுகளுக்கும் இடையே விரைவில் செய்து கொள்ளப்படும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. தல்பஹேவா தெரிவித்தார். [உ-எ]

# பாதயாத்திரை நடத்த தெற்கு மீனவர் முஸ்தீபு

கொழும்பு, ஏப். 27

தென்பகுதி மீனவர்கள் பாதயாத்திரை ஒன்றை நடத்தப் போவதாக அரசுக்குப் பயமுறுத்தல் விடுத்துள்ளனர்.

வெளிநாட்டார்கள் படகுகளில் (றோலர்களில்) வந்து தென் கடலில் மீன் பிடிப்பதை உடன் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும்—

இது குறித்து நடவடிக்கை எடுக்காதுவிடில், மீன்பிடிக் கிராமங்களான மிரிஸ்ஸையில் இருந்து திக்வல்ல வரை எதிர்ப்பு பாதயாத்திரை ஒன்றை நடத்துவது என்றும் மாத்தறை மாவட்ட மீனவர் குழு முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக பிரஸ்தாப மீனவர் குழு, ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கும் அறிவித்துள்ளது. (ஒ-த-எ)

# தோட்டங்கள் தனியார் மயமானால் சிங்களவர் பாதிக்கப்படுவார்களாம்

கொழும்பு, ஏப். 27

மலையகத் தோட்டங்களின் நிர்வாகங்கள் தனியார் நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்படுவதால் சிங்களவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சம் நிலவுகின்றது.

ஆகவே அரசின் இந்த முயற்சியைத் தாங்கள் தொடர்ந்தும் எதிர்க்கப் போவதாக மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகள் தம்மைச் சந்தித்த பிரதமர் டி.பி. விஜதுங்காவிடம் தெரிவித்தனர்.

தோட்ட நிர்வாகங்களை தனியார் துறையினரிடம் ஒப்படைக்கும் அரசின் முடிவு பற்றியும் அதற்கான காரணங்கள் பற்றியும் பிரதமர் இரண்டு பீடாதிபதிகளையும் சந்தித்து விளக்கமளித்தார். மூன்று மணித்தியாலங்கள் இச்சந்திப்பு நீடித்தது.

தோட்டங்கள் லாபகரமாகச் செயற்படாத காரணத்தினால் தான் அரசு இந்த முடிவை எடுத்துள்ளது என்று பிரதமர் கூறியதற்கு—

அரச தோட்டங்கள் லாபகரமாக இயங்காததற்கு அரசு தான் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று மகாநாயக்க தேரர் கூறினார்.

தற்போதைய அரசு தொண்டமானின் கோரிக்கைகளை ஏற்று, வேலை செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி மலையக தமிழ் தோட்டத் தொழிலாளருக்கு மாதத்தில் 24 நாட்கள் சம்பளம் கிடைக்க வழி செய்தது என்றும் மகாநாயக்க தேரர் சுட்டிக்காட்டினார். [த-எ]

# திருமலையில் ''ரைம் பொம்''

கொழும்பு, ஏப். 27

திருகோணமலை லவ்லேன் பகுதியில் — சிறிமாபுர பொலீஸ் விடுதிக்கு முன்னால் — கைவிடப்பட்ட நிலையில் உள்ள கஞ்சிகம் ஒன்றினுள் அண்மையில் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

'' ரைம் பொம் '' ஒன்றே வெடித்தது என்று பொலீஸார் தெரிவித்தனர். அதனால் உயிர் மற்றும் பொருள் இழப்புக்கள் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது. [த-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### அருணாசலம் தியாகராசா

[இளைப்பாறிய P. W. D. ஓவசியர்]

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலம்சென்ற நொத்தாரிஸ் அருணாசலம் அமுதம் ஆகியோரின் அன்பு மகனும் தில்லையம்பலம் வள்ளிமுத்து ஆகியோரின் அன்பு மருமகனுமாகிய தியாகராசா காலமானார். இவர் நாகேஸ்வரியம்மாவின் அன்புக் கணவரும் தவமணிதேவி, கமலாதேவி, மணிமேகலாதேவி, இரகுநாதன், இந்திரா, ஜெயதேவி, ஜெகநாதன், ரஜனி, நளாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவஞானம், ஸ்கந்தகுமார், காலஞ்சென்ற மனோசந்திரா, வடிவாம்பாள், மோகனா, உமாச்சந்திரன், இரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், திலகவதி நாகலிங்கம், வாகீசபிள்ளை, காலம்சென்ற கமலாம்பிகை, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுகந்தன், சுகுமார், சசீலன், சொரூபன், மயூரன், மாதினி, லக்ஸ்மன், நிரோஜன், நிஷான், சயந்தன், சாமன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி நாகேஸ்வரியம்மா தியாகராசா
[மனைவி]

வட்டு கிழக்கு,
சித்தன்கேணி.
[20745]

### சரவணமுத்து பரமனாதர்

நயினாதீவு, சரவணமுத்து பரமனாதர் 22-4-92 புதன்கிழமை நயினாதீவில் காலமானார். இவர் கமலாம்பிகையின் அன்புக் கணவரும், யோகராஜா, [தபாலதிபர் யாழ்ப்பாணம்], ஜெயராஜா [வரிஉத்தியோகத்தர் யாழ்ப்பாணம்], வரதராஜா [ஜேர்மனி], இராஜேஸ்வரி, ரதீஸ்வரி [ஜேர்மனி], இந்திரேஸ்வரி (ஆசிரியை, சென். திரேசா வித்தியாலயம் அச்சுவேலி), சோதீஸ்வரி [ஜேர்மனி], சுதாகரராஜா [கனடா], தேவராஜா [சுவிஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சிதா [ஆசிரியை நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயம்], சரஸ்வதி (தொத்தணி அதிபர் ஏழாலை), கிரிஜா லினி [ஜேர்மனி], சிவநாதன் [பொலிஸ் சார்ஜண்ட்], பரமநாதன் [ஜேர்மனி], முத்துராஜா [ஆசிரியர் மகா வித்தியாலயம் அச்சுவேலி], சந்திரசீலன் (ஜேர்மனி), சுசி [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜயகாந், லதாஜினி, சசிகஜன், பவித்திரா, ராம்குமார், சுமித்திரா, சுமன்ராஜ், கவிதா, சோபனா, கஜனி, பிரியா, பிரசாந்த், நிசாந்தி, கடோர்க், அர்ச்சுனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-4-92 வியாழக்கிழமை நயினாதீவில் நடைபெற்றதென்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்
மக்கள்
ப. யோகராஜா [தபாலதிபர்]
ப. ஜெயராஜா [வரிஉத்தியோகத்தர்]

182, கச்சேரி நல்லூர் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
(20744)

### சின்னத்துரை மகாதேவா

கொக்குவில் மேற்கு நாகலிங்கம் வீதியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் சின்னத்துரை மகாதேவா நேற்று சிவபதமடைந்தார்.

அன்னார் சின்னத்துரை — காலம்சென்ற திரவியம் ஆகியோரின் மூத்த மகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் தர்ஷினி, தயாளன் [லண்டன்], தயானந்தன், அனுஷா [கொக்குவில் இந்து மாணவி], தர்மிகா, தாட்சாயினி [கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவிகள்], தர்மிலா ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசலட்சுமி, அன்னலிங்கம், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற செல்லம்மா, பரமேஸ்வரி, தேவராசா, பகவதி, நாகரத்தினம், பூமணிதேவி, காலஞ்சென்ற மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மூத்த தம்பி — மனோன்மணி ஆகியோரின் மருமகனும், வேலாயுதபிள்ளை [ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி] பாலசுப்பிரமணியம் [சுவிஸ்], யோகேஸ்வரி, செல்வராணி, செல்வகுமார் [லண்டன்] ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று நண்பகல் 12 மணியளவில் கம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்
சகோதரர்கள்

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு.
[20748]

## இன்று

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை சுன்னாகம் ஸ்கந்தா அணியை எதிர்த்து சென். தோமஸ் அணி மோதும்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 3-00 மணிக்கு இந்த ஆட்டம் ஆரம்பமாகும். [உ]

★ ★ ★

லெப்டினன்ட் கேர்ணல் விக்டர் ஞாபகார்த்தமாக உரும்பராய் 'ஒஸ்கா' விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திருமலை நட்சத்திரங்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதும். இன்று மாலை 5 மணிக்கு கோண்டாவில் குமரன் மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெறும். (உ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப் 27

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தில் இன்று மாலை 4 மணியளவில் திருநாவுக்கரசுநாயனார் குருபூசை விழாவை கொண்டாடவுள்ளனர். [ஒ]

## நாளை

உடுவில், ஏப். 27

''விசர்நாய்க்கடியும் தடுப்பு முறைகளும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரன், சுகாதார போதனாசிரியர் திரு. வைத்தீஸ்வரன் ஆகியோர் கருத்துரை வழங்குவர். [த-90]

## உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 27

பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகர் ஆலய வருடாந்த தெற்போற்சவ திருவிழா இன்று நடைபெறுகிறது மாலை 7 மணிக்கு இன்னிசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (உ-165)

## ஒத்திவைப்பு

வடமராட்சி, ஏப். 27

பருத்தித்துறை பழைய பஸ் நிலைய மைதானத்தில் முத்தமிழ்விழா நிதிக்காக இன்று நடத்தப்படவிருந்த சாந்தன் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் சந்தனக்காடு நாடகமும் மறு அறிவித்தல் வரும்வரை பின்போடப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் வடமராட்சிப் பிரிவினர் அறிவித்துள்ளனர். [ஒ]

## போர்நிறுத்தம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பௌத்த குழுவினர் நேற்று இறுதிக்கட்டப் பேச்சுக்களின் பின்னர் இவ்வாறு உறுதி வெளியிட்டனர்.

தமிழ் மக்களின் அவல நிலையை அரசுக்கும் சிங்கள மக்களுக்கும் தெரியப்படுத்தி, தமிழ் மக்களின் துயர் துடைக்க தம்மாலான முயற்சிகளை மேற்கொள்ளவிருப்பதாகவும் அவர்கள் உறுதியளித்தனர்.

குழுவினர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த போது பல்வேறு இடங்களுக்கு நேரில் சென்று மக்களின் வாழ்க்கை நிலையை நேரில் கண்டறிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

# தந்தையை நேசிப்பவர் தலைவர் பிரபாகரன்

## அஞ்சலி நிகழ்ச்சியில் உரை

யாழ்ப்பாணம், ஏப். 27

இந்திய சுதந்திரத்திற்காக காந்தி அகிம்சைப் போராட்டம் நடத்தினார். ஆனால் சுபாஸ் சந்திரபோஸ் ஆயுதமேந்திப் போராடினார்.

அதே போல தமிழீழ விடிவிற்காக தந்தை செல்வா அகிம்சைப் போரை முன்னெடுத்தார். தலைவர் பிரபாகரன் ஆயுதப் போராட்டத்தை நடத்தி வருகிறார்.

இவ்வாறு நேற்றுக் காலை தந்தை செல்வநாயகத்தின் நினைவுத் தூபிக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியின் போது உரையாற்றிய பண்டிதர் கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

மகாத்மாகாந்தியும், சுபாஸ் சந்திரபோஸும் ஒருவரை மற்றவர், நன்றாக நேசித்தனர். தந்தைசெல்வாவை தலைவர் பிரபாகரனும் நேசிக்கின்றார், மதிக்கின்றார் இந்த நினைவஞ்சலி வைபவம் அதற்கு எடுத்துக்காட்டாகும்—

தமிழினம் ஒரு தேசிய இனம் அதற்கு ஒரு நாடு உண்டு. தனி அரசு தமிழரசு அமைக்கும் என்று உலகையும் உணர வைத்தவர் தந்தை செல்வா அதற்காகப் பல போராட்டங்களை நடத்தியவர். தமிழீழ உணர்வை தூண்டியவர் தந்தை செல்வா — என்றும் அவர் தெரிவித்தார்.

திரு. யோகி மற்றும் பலரும் நினைவஞ்சலி செலுத்தினர். [அ-15]

## ஆட்சியைப் பிடிப்பதற்காக

# முஜாகுதீன் போராளிகள் காபூலில் கடும் சண்டை

காபூல், ஏப் 27

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் முஜாகுதீன் போராளிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததை அடுத்து அங்கு போராளிகளிடையே கடும் சண்டை மூண்டிருக்கிறது.

அகமது ஷா மசூத் என்பவரின் தலைமையிலான போராளிகள் குழுவே காபூலில் ஜனாதிபதி மாளிகையை முதலில் கைப்பற்றின. எனினும் மற்றொரு குழுவான— குல்புதீன் ஹெக்மதியார் தலைமையிலான— ஹெஸ்பி இஸ்லாமிய படைகளும் ஜனாதிபதி மாளிகையைக் கைப்பற்ற போராடிவருகின்றன.

இந்தச் சண்டைகளின் போது டாங்கிகள், ஏவுகணைகள் என்பன தாராளமாகப் பாவிக்கப்பட்டன என்றும்—

இதனால் நகரம் அதிர்ந்து கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிந்திக் கிடைத்த செய்திகளின்படி—

அகமத் ஷா மசூத் தலைமையிலான படைகளின் கையே ஓங்கியிருக்கிறது— அக்குழுவினர் ஜனாதிபதி மாளிகையை மீண்டும் முழுக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-எ-த-10]

## மாணவருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ் கோட்ட பாடசாலைகளின் மாணவர் கழகங்கள் மேதின ஒழுங்கு பற்றி நாளை மாலை 4 மணிக்கு யாழ் இந்து குமாரசுவாமி மண்டபத்தில் கூடி ஆராயவுள்ளன.

இக்கூட்டத்திற்கு யாழ் கோட்ட பாடசாலைகளில் உள்ள சாரணர்குழு, சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் கழகம், லியோ கழகம், இன்ரறக்ட் கழகம், சேவை கழகம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் அழைக்கப்பட்டிருப்பதாக யாழ் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். [உ]

## தொ. ஆசிரியர் மகஜர் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 27

தொண்டர் ஆசிரியர் சங்கத்தினரும் நேற்று பிக்குமார் குழுவிடம், ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்ட மகஜர் ஒன்றைக் கையளித்தனர்,

தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனத்தை உடனடியாக வழங்குமாறு அந்த மகஜரில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் —

தொண்டர் ஆசிரியர்கள் தத்தமது விவரங்களை இன்று அல்லது நாளை மறுதினம் புதன்கிழமை பட்டப்படிப்புகள் கல்லூரியில் ஒப்படைக்குமாறு தொ. ஆ. சங்கம் கேட்டுள்ளது. [ஒ]


புலமைப்பரிசில் ஆண்டு 5 - 1991
விசேட பரீட்சை 1992

அரசாங்கத்தால் 26 - 04 - 92 (ஞாயிறு) நடத்தப்பட்ட பரீட்சை வினாத்தாள்கள் விடைகளுடன் விற்பனையாகின்றன, பாடசாலைகளுக்கும், தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் விசேட கழிவுண்டு.

Examination Unit
BOND INSTITUTES JAFFNA
[2074]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27 - 4 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org